International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 02 April to June 2020 www.irjtsjournal.org

# வளையாபதி காப்பியத்தில் காணாலாகும் அறநெறிச் சிந்தனைகள்

முனைவர். க. தனலெட்சுமி,
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதி)*
*ந.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,*
*மதுரை – 625019*

**முன்னுரை**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, என்பன தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படுகின்றன. தெய்வத்தையோ, உயர்ந்த மக்களையோ கதைத்தலைவர்களாகக் கொண்ட நீண்ட செய்யுள் காப்பியம் ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்கள் அடங்கியவை காப்பியம் எனப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெருங்காப்பியம் தோன்றின.

“காப்பியம் என்ற சொல்லுக்கு நேரான ஆங்கிலச் சொல் ‘எபிக்’ (Epic) என்பதாகும். ‘எபொசு’ (Epos) என்பதாகும். ‘எபிக்’ (Epic) என்று குறிக்கும் சொல் தமிழில் ‘காப்பியம்’ என்ற இலக்கிய வகையைக் குறிக்கும். ‘எபிக்’ என்ற இலக்கிய வகையைக் குறிக்கும். ‘எபிக்’ என்ற சொல்லின் பொருளாக ‘வீரப்பண்புடைய’ (Heroic) மீமானிடமான (Super Human) அகல் விரிவான (Large) பெருமதிப்பகட்டான (Grandiose) என்பன அமையும்” என்பர்.[1] நீண்ட கதையைத் தொடர்நிலைச் செய்யுளில் அமைத்துக் கூறுவது காப்பியம் ஆகும். ஐம்பெருங்காப்பியம் என்ற தமிழ்சொல்லுக்கு நேரான வடசொல் ‘பஞ்சகாவ்யம்’ என்பதாகும். இச்சொல் பெருந்தொகை, தமிழ்விடு தூது. ஆகிய நூல்களில் பயின்று வருகிறது. பெருந்தொகை நிகண்டில்

**“சிந்தா மணிதிகழ் சிலப்பதிகாரம்**
**மணிமே கலைவளை யாபதிகுண்டல**
**கேசி பஞ்சகா வியமெனக் கிளத்துவர்”** **(பெருந்தொகை. நிகண்டு. 1)**

என்று கூறுவதன் வழியே ஐம்பெருங்காப்பியத்தின் வைப்பு முறையை அறியமுடிகிறது. நச்சினாக்கினியரும், அடியாக்கு நல்லாரும் காப்பியம் வடமொழிச் சொல் என்று கூறுகின்றனர். ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்றான வளையாபதியில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் தலைசிறந்தது அறமாகும். இந்த அறச்சிந்தனைப் பற்றிய கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வளையாபதி காப்பியத்தின் சிறப்பு மற்றும் கதைச் சுருக்கம்.**

இக்காப்பியத்தின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. இது ஒரு சமணசமயநூலாகும். இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. 72 பாடல்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. யாப்பருங்கல விருத்தி, சிலப்பதிகாரம் முதலிய சில நூல்களின் உரையில் இதிலுள்ள சில பாடல்கள் காணப்படுகின்றன. விருத்தப்பாவின் முன்னைய வளர்ச்சி நிலைகளை வளையாபதியில் காணலாம். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்குநல்லார், யாப்பருங்கல விருத்தியின் உரையாசிரியர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர் முதலானோர் இந்நூலின் பாடல்களை மேற்கொள் காட்டுகின்றனர்.

நவகோடி நாரயணன் என்ற வைசியன் வேறுகுலப் பெண்ணை மணந்து கொள்கிறான். அதனால் அவனைச் சார்ந்தோர் வெறுக்கவே, மனைவியை விட்டு அயல்நாடு சென்று விடுகிறான். அந்த பெண்ணுக்குப் பிறந்த மகன் பெரியோனாகி, பல்லாண்டுகள் கழித்து, புகார் நகரம் புகுந்து, தன் தந்தையைக் கண்டுபிடித்துத் தாயோடு சேர்கின்றான் என்பதே இக்காப்பியத்தின் கதைச் சுருக்கம், இதுவே வளையாபதியின் கதை என்பர். இக்கதை வளையாபதிக் காப்பியத்திற்கு உரியதில்லை என்பாரும் உள்ளனர். இதில் குறள் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. வளையாபதி சமணக் காப்பியமாக இருந்தாலும் மக்கட் செல்லவத்தின் மாண்பினையும், ஊழ்வினையையும் பற்றிப் பேசுகிறது. இந்நூலின் நிலையாமைக் கருத்துக்களும், பொய், களவு, காமம், கொலை போன்ற தீயஒழுக்கங்களின் தீமைகளும் விளக்கப்படுகின்றன. தக்கயாக பரணி உரையில் **"ஒட்டக்கூத்தர் வளையாபதியை நினைத்தார் கவியழகு வேண்டி"**[2] என வந்துள்ளதால் வளையாபதி செய்யுள்கள் கிடைத்த பாடல்களைக் கொண்டு இலக்கியச்சுவையும், பொருட்செறிவும் கொண்ட பாடல்களால் அமைந்தது என்பதைக் கூறமுடியும். தனிப்பாடல்களின் தொகுப்பாக அமையாமல், நீண்ட கதையைத் தொடர்நிலைச் செய்யுளில் அமைத்துக் கூறுவது காப்பியம் ஆகும். தெய்வத்தையோ, உயர்ந்த மக்களையோ கதைத்தலைவர்களாகக் கொண்ட நீண்ட செய்யுள் காப்பியம் ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்கள் அடங்கியவை காப்பியம் எனப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெருங்காப்பியம் தோன்றின.

### நிலையில்லா செல்வம்

பிறவி துன்பத்தினை நீக்க வேண்டுமானால் நிலையற்ற செல்வத்தின் மீது பற்று வைக்கக்கூடாது என்பதையும், மனித வாழ்க்கையில் இளமையும், இன்பமும், செல்வமும், நிலையில்லாதது. அதனைப் பாதுகாத்தலும், அடுத்த பிறவிக்குக் கிடைத்திடாது இப்பிறவியில் கிடைத்த இவற்றைக் கொண்டு நல்லறங்களைச் செய்து அடுத்த பிறவிக்கான புண்ணியத்தை சேர்த்திட வேண்டும் என்பதை வளையாபதி,

**"இளமையும் நிலையாவால் இன்பமும் நின்ற அல்ல**
**வளமையும் அஃதேபோல் வைகலும் துன்பவெள்ளம்**
**உளவென நினையாதே செல்கதிக்கு என்றும்என்றும்**
**விளைநிலமே உழவார்போல் வித்துநீர் செய்துகொண்மீன்"**[3]

என்ற பாடலில் அறியமுடிகிறது. மனித வாழ்விற்கு பொருள் தேவை. அப்பொருள் பெரிய அளவில் கிடைக்குமென்றாலும் பொய் கூறக் கூடாது. உண்மையே பேச வேண்டும். அவ்வாறு உண்மை பேச வாழ்தலே நலம் பயக்கும். அறம் என்பதற்கு கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக் கடவுள், தருமதேவதை, தீப்பயனுண்டாக்குஞ் சொல் என்று கழகத்தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. பொருட்செல்வத்தை அறவழியில் ஈட்டுதல் வேண்டும். அறமும், இன்பமும் செழிப்பதற்குக் காரணமாக உள்ள பொருட்செல்வத்தை அறவழியல் ஈட்ட வேண்டும் என்பதை பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

### நல்லொழுக்கம்

ஒழுக்கமோடு வாழும் போது நற்சிந்தனை இயல்பாகவே வந்துவிடுகிறது. ஆண்மகன் எவன் ஒருவன் நல்லொழுக்கங்களைக் பெற்று தன் குடும்பத்தை அன்பாக செலுத்தி வாழ்கின்றானோ அவனை அவ்வூர் மக்களும், அவனுடைய நாடும் சேர்ந்தும் போற்றி புகழ்மாலை சூட்டும்.

**"தாரம் நல்வதம் தாங்கித் தலைநின்மின்**
**ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை**
**வீரவென்றி விறல்மிகு விண்ணவர்**

**சீரின் ஏத்திச் சிறப்பு எதிர்கொள்பவே"[4]**

என்ற பாடலின் வழியே புகழ் குறித்து குறிப்பிட்டுள்ளது. இதே போன்று சிறந்த ஒழுக்க நெறியைப் பின்பற்றி வாழ்பவர்கள் மேலான உலக இன்பத்தையும், மோட்சத்தையும் அடைந்து நிலைத்த இன்பத்தை பெறுவர் என்பதை,

**"நகைநனி தீதுதுணி நன்றி யார்க்குப்**
**புகைநனி தீதுபணிந்தீ யாரோடும்**
**மிகைநனி பொருள் என்று இறத்தல் இவரே**
**வகைமிகு வானுலகு எய்திவாழ் பவரே"[5]**

ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தைத் தூய்மையுடன் வைத்தலே அறமாகும் அறம் என்பது தூய எண்ணம், சொல். செயல் சேர்ந்த ஒன்றாகும். ஒருவன் அறத்தோடு வாழ்க்கையை நடத்திச் செல்ல எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும். அறத்தின் வழியே செல்லும் நல்லொழுக்கதினால் தான் வாழ்வில் இன்பத்தை அடைகின்றான். என்பதை இப்பாடலின் மூலம் மகிழ்ச்சி பற்றி வளையாபதி கூறியுள்ளதை அறியமுடிகிறது.

**அன்பு செலுத்துதல், ஊழ்வினை**

மனித உலகத்தை இணைத்து வாழச்செய்யும் அற்புத சக்தி அன்புக்கே உண்டு. அறம் பெருக வேண்டும் எனில் நல்லனவற்றை தேடிச் சென்று இனிய சொற்களின் வழிக் கூறவேண்டும்.

**"ஆற்று மின்னரு னாருயிர் மாட்டெலாந்**
**தூற்று மின்னறந்தொநனி துன்னன்மின்**
**மாற்று மின்கழி மாயமு மானமும்**
**போற்று பின்பொரு ளாவியைக் கொண்டுநீர்"[6]**

என்ற பாடலின் வழி பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்று சுட்டுவதை உய்த்துணர முடிகின்றது. இன்பம் துன்பம், என்பது நம் வினையின் காரணமாக அமைவதாகும். இன்பமும், துன்பமும் உலகின் இயல்புகளாகும் என்பதை உணர்ந்து விருப்பு, வெறுப்புகளை நீக்கி வாழ்ந்திடல் வேண்டும் என்பதை வளையாபதி,

**"பருவந்து சாலப் பலர்கொல் என்றெண்ணி**
**ஒருவந்தம் உள்ளத்து உவத்தல் ஒழிமின்**
**வெருவந்த துன்பம் விடுக்கும் திறவோன்**
**ஒருவன் உலகிற்கு ஊன் என்னுமாறே"[7]**

என ஊழ்வினை பற்றி பேசுகிறது. கொல்பவனக்கு தீவினை வருவது போலவே உண்பவனுக்கு பழியும், பாவமும், பகையும் ஆகியவை உறுதியாக வந்து சேரும், (ப. 13), கொல்பவனுக்கு தீவினை வருவது போலவே, உண்பவனுக்கு தீவினை வந்து சேர்வது உறுதி (ப.18)என்று பாடல்களின் வழி அறியமுடிகிறது. ஒழுங்கு இன்றியமையாதவை என்று கருதப்பட்டு அவை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால் அவை அறங்கள் எனப்படும் அன்பாய் இருப்பது, இனிமையாக பேசுவது ,

கடுஞ்சொற்களை தவிர்ப்பது அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையாலும், நெஞ்சில் இன்பதுன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக்கூடுமே அன்றி புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறியமுடிகிறது.

**முடிவுரை**

அன்றைய சமுதாயத்தில் நிகழ்ந்த கொடுமையைப் பற்றி அறிந்து கொள்வதுடன் அக்கொடுமைக்கு உண்டான தீர்வையும் நல்வழிப்படுத்துகின்ற அறநெறிகள் பலவற்றை எடுத்தியம்புகிறது. "ஒரு நாடு அல்லது அதன் நாகரீகம், பண்பாடு முதலான உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சி வெறுகிறபோது தான் பழைய பண்பாட்டினை மீட்டுருவாக்கவும், புதிய சமூக மாற்றத்தை எடுத்துரைத்து மனித சமூகத்தை உயர்த்துவதுமான உயரிய நோக்குடைய காப்பியங்கள் தோன்றும்"[8] என்று கூறும் காசிநாதன் கருத்து நோக்குவதற்குரியதாகும். வுளையாபதியில் நல்லறங்கள் நாள்தோறும் கூற வேண்டும், பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும், ஊழ்வினை பற்றி நினைக்காமல் இருக்க வேண்டும், பிறர் மனைவியை விரும்பும் கயவர்களுக்கு பழியும், பாவமும், பகையும் ஆகியவை உறுதியாக வந்து சேரும் என்றும், ஒவ்வொரு மனிதனுக்கும் அறச்சிந்தனைகள் இயல்பாகவே அமைய வேண்டும், அப்போது தான் அவனுடைய வாழ்க்கை செம்மாந்து அமையும் என்பதை காப்பியங்கள் உணர்த்துவதை உணரமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] இரா. காசிராசன், காப்பியம் - ஒரு சொல்லாய்வு இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்
[2] மன்றம் 5-ம் கருத்தரங்கு ஆய்வுக் கோவை ப. 640
[3] தக்கயாகபரணி உரை ப.425
[4] கமலாமுருகன், (உ.ஆ) வளையாபதி, குண்டலகேசி (மூல. உரை) ப. 36
[5] .கமலாமுருகன், (உ.ஆ) வளையாபதி, குண்டலகேசி (மூல. உரை) ப. 13
[6] மேலது ப. 64
[7] மேலது ப. 16
[8] மேலது ப. 41
[9] இரா. காசிராசன், காப்பியம் - ஒரு சொல்லாய்வு இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்
[10] மன்றம் 5-ம் கருத்தரங்கு ஆய்வுக் கோவை ப. 640